Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 2    (14.02.94)    திங்கட்கிழமை    ஓசை 361

14-2-1994

## ஆங்கில மொழி அறிவின்மையால் 8000 பட்டதாரிகட்கு வேலையில்லை

ஆங்கிலத்தில் போதிய அறிவு இன்மை காரணமாக சுமார் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்றிருப்பதாக அமைச்சர் விமல் விக்கிரமசிங்க கூறியுள்ளார். ருவான்வெல பாடசாலையொன்றில் நடைபெற்ற 174வது மகாபொல நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் கூறும் போது திறந்த பொருளாதாரக் கொள்கையை அரசு அமுல்படுத்தி வருவதன் காரணமாக அநேக தனியார் நிறுவனங்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இந்நாட்டில் அநேக கைத்தொழில் பேட்டைகளைத் தொடங்கினர். ஆயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. எனினும் இந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்புபெற ஆங்கில அறிவு தேவைப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் பிரச்சினை தீர்க்கப் பரிசீலனை

## வீரச்சாவு

### லெப். ஜெயராஜ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் ஜெயராஜ் (தர்மரட்ணம் தயாரஞ்சன் மெயின் வீதி, வாழைச் சேனை மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வவுனியாவில்வசிக்க அனுமதி தேவை

வவுனியாவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் வாழும், தங்கும் அனைவரும் விசேட அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என பொலிசார் அறிவித்துள்ளனர். இவர்கள் கிராம சேவையாளருடைய சிபார்சுடன் மூன்று பத்திரங்களை பொலிசில் பதிய வேண்டும் எனவும், இதில் ஒன்று பொலிசிடமும் மற்றையது கிராம சேவையாளரிடமும் மற்றொன்றுபிரதானகுடியிருப்பாளரிடமும் இருக்கவேண்டுமென கூறப்பட்டுள்ளது.

## வீடியோ கமரா முன் இளைஞர் தற்கொலை

### மனைவி பார்க்கவேண்டுமாம்

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் தற்கொலை செய்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட இலங்கை இளைஞர் ஒருவர் தான் தற்கொலை மூலம் துடிதுடித்து இறப்பதைத் தமது இளம் மனைவிக்கு தெரிய வைப்பதற்காக வீடியோ புகைப்படக் கருவியை இயக்கி வைத்து விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்தாராம்.

மேற்படி இளைஞரின் பெயர் ஆனந்தரூபன் வயது 27 யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்தவர்.

இவர் கடந்த மாதம் தான் திருமணம் செய்து கொண்டார். தமது மனைவியுடன் சண்டையிட்டுக் கொண்டாராம்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானில் அமைச்சர் ஹமீத்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கிலுள்ள இனப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக பரிசீலனை செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், இதற்கான சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் ஜப்பானில் தெரிவித்தார்.

தற்பொழுது ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவம் ஒன்றில் பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்,

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரை சமாதானத் தீர்விற்கான முயற்சி தொடர்கிறது. நாட்டின் ஐக்கியத்தையும், ஒற்றையாட்சி முறையையும் பேணும் எந்தவொரு அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனையையும் பரிசீலிக்க அரசு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தகத்தில் தாராளமயமாக்கல் கொள்கையை மேற்கொண்ட முதற் தெற்காசிய நாடு இலங்கையே ஆகும். பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாட்டில் பொருளாதார அபிவிருத்தி மூலமே பிரிவினைச் சக்தியை வெற்றிகாண முடியும். அனைவருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவை கவனிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கடவுச் சீட்டு தயாரித்த தமிழருக்கு சிறை

(ரொரன்ரோ)

போலிக் கடவுச் சீட்டுக்களைத் தயாரித்த இலங்கைத் தமிழர் ஒருவருக்கு கனேடிய நீதிமன்றம் 15 மாதச் சிறைத் தண்டனை விதித்துள்ளது. ரொரன்ரோ, செர்போன் வீதியைச் சேர்ந்த லோகநாதன் சபாநாயகம் எனும் இவர் கனடாவில் அகதி அந்தஸ்துப் பெற்றிருந்தவராவார். 1991 ஆம் ஆண்டு டிசெம்பரில் ரொரன்ரோ லோரன்ஸ் அவெனியுவிலுள்ள கட்டடம் ஒன்றைத் துப்பரவு செய்யும் தொழிலாளர்கள் போலிக்கடவுச் சீட்டுகளைத் தயாரிக்கும் கருவிகளைக் கண்டுபிடித்து பொலிசாருக்கு அறிவித்திருந்த

(3ஆம் பக்கம் பார்க்க)

சிப்பாயின் சடலத்தை ஏற்றிச்சென்ற

## இராணுவ வாகனம் மோதி சிறுவன் ஸ்தலத்தில் பலி

(வவுனியா)

நீரில் மூழ்கி மரணமான இராணுவ சிப்பாயின் சடலத்தை ஏற்றிக் கொண்டு வவுனியாவிலிருந்து புறப்பட்டு சென்ற ட்றக் வண்டி மதவாச்சி பகுதியில் வைத்து சிறுவன் ஒருவனை மோதியதால் அச் சிறுவன் ஸ்தலத்திலேயே பலியானான்.

நீச்சல் தெரியாத இராணுவச் சிப்பாய் நீரில் மூழ்கி இறந்த பின்னர் அவரது சடலம் மல்சிறிபுரவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது.

## கிழக்கில் மிரட்டல் மூலம் வாக்களிக்க வற்புறுத்து

கிழக்கு மாகாணத்தில்உள்ளூராட்சித் தேர்தல் தினத்தில் தமிழ் மக்களில் வாக்களிக்கக் கூடியவர்கள் அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டு கைதுசெய்யப்படுவர் எனவும் பின்னர் அவர்கள் வாக்குச் சாவடிக்குக் கொண்டு செல்லப்படுவர் எனவும் சிறிலங்கா அரச படையினர் தமிழ் மக்களை மிரட்டி வருகின்றனர்.

வாக்களிக்கச் செல்லாத தமிழ் மக்கள் அனைவரையும் தாம் பிடித்துச் செல்லப்போவதாகவும் சிறிலங்கா அரச படையினர்வீடுவீடாகச்சென்று ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்து வருகின்றனர்.

இதேவேளை தம்மை ஆதரிக்கும் படி வேட்பாளர் எனக் கூறிக் கொண்டு சிலரும் வேறு சிலரை தமது அரசு சார்பான வேட்பாளர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்கத்தக்கவை

### ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழ் மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள் முன் ... தங்கியிருந்து இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மற்றும் யுத்த நெருக் ... திகளை எவ்வளவு வேகமாக மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு வேகமாகவே மேற்

# பிரேமாமைத்துனர் கொலை சந்தேக நபர் தேடப்படுகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மைத்துனரான பத்ரபால விக்கிரமதுங்காவை கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் இருப்பிடத்தை அறிந்துகொள்வதில் சிறிலங்கா பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

கொலையாளி எனச் சந்தேகிக்கப்படும் நபரின் இரு நெருங்கிய நண்பர்களை தாங்கள் விசாரித்துள்ளோம். சந்தேக நபரைப் பிடிப்பதற்கு அவர்களிருவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மார்ச் 1 இல் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கிழக்கிலும் வவுனியா நகரிலும் திட்டமிட்டபடி மார்ச்மாதம் முதலாம் திகதி உள்ளூராட்சித்தேர்தல் நடைபெறும் என சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார்.

இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் கிழக்கில் 800 வாக்குச்சாவடிகளும் வவுனியாவில் 18 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் வீதிகளில் பல சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு பலத்த சோதனைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் முன் வைக்கும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவைஎன நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு யாழ். வந்து தங்கியுள்ள அதிவணக்கத்திற்குரிய அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் தான் பட்ட மற்றும் யுத்த நெருக்கடிகளால் அல்லற்படும் மக்களை நேரில் சந்திக்க முடிந்தது என்றும் இவர்களின் வாழ்க்கைத்தரம் சிறிலங்காவில் வாழும் மக்களுடன் ஒப்பிடும் வேளையில் மிகவும் கவலை தருவதாக உள்ளது எனவும் ஆயர் குறிப்பிட்டார்.

தனது நல்லெண்ண முய வளவு வேகமாகவே மேற்கொள்ள முயற்சிப்பதாக குறிப்பிட்ட ஆயர் அனைத்து மக்களும் சமாதானத்தையே விரும்புவதால் அவர்களின் விருப்பு பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதுவே தனது நல்லெண்ண முயற்சிகளின் முக்கிய நோக்கமாகும் என்றார்.

# அச்சுவேலி ஈவினைப் பகுதியில் விமான குண்டுவீச்சு தாக்குதல்

(வடமராட்சி)

ஈவினைப்பகுதியில் நேற்று சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் வீதியால் சென்ற வாகனங்கள் சில சேதமடைந்ததாக தெரியவருகிறது.

காலை 11-00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த உலங்கு வானூர்தி ஒன்று தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த போது இரு குண்டு வீச்சு விமானங்கள் அவ்விடத்துக்கு விரைந்து வந்து குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

மக்கள் குடியிருப்பு பகுதிகளில் இவ் இரு விமானங்களும் எட்டுக் குண்டுகள் வீசின.

இதேவேளை அப்பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து எறிகணை வீச்சும் நடாத்தப்பட்டது.

# வடமராட்சி பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது இராணுவத்தினரால் பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறித்த முகாமிலிருந்து நேற்றுக் காலை 5.00 மணியளவில் இத்தாக்குதல்கள் நடைபெற்றன. குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட பல எறிகணைகள் வெளியிடங்களிலும் கடல்பகுதியிலும் விழுந்து வெடித்ததில் பாரிய சேதங்கள் ஏற்படவில்லை.

வடமராட்சியில் வல்வெட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கத்தோலிக்க பாப்பரசர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

உலக கத்தோலிக்கர்களின் தலைவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இவரை இலங்கைக்கு விஜயம் தரும்படி ஜனாதிபதி விஜேதுங்கா அனுப்பிய தனிப்பட்ட அழைப்பு அடங்கிய கடிதத்தை கடந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர்கள்

# உறவினர் வைபவத்திற்கு செல்லமுடியாதஅவலநிலை

(கொழும்பு)

தென்பகுதியில் தங்கியுள்ள தமிழர்கள் உறவினர் வீடுகளில் நடைபெறும் வைபவங்களில்கூட கலந்துகொள்ள முடியாத நிலை காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வருடங்களாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியுள்ள தமிழர்கள் வயது வேறுபாடின்றி பால் வேறுபாடின்றி வகைதொகையாக சிறிலங்காப் படையினராலும், விசேட படை அணியினராலும் திடீர் திடீரெனக் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்படுவது தெரிந்ததே.

(3ஆம் பக்கம் பார்க்க)

# பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண புலிகள் நல்ல சமிக்கை காட்டியுள்ளனர்

## சர்வோதயத் தலைவர் ஆரியரெட்னா

சிறிலங்காவில் நிகழும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காணுவதற்கு விடுதலைப்புலிகள் ஓர் நல்ல சமிக்கையைக் காட்டியுள்ளனர். இதனை நாம் அவர்களின் பலவீனமாகக் கருதிவிடக் கூடாது. அவர்கள் நல்ல பலமான நிலையில் இருந்துகொண்டுதான் இவ் அழைப்பை விடுத்துள்ளனர் என சர்வோதய தலைவர் ஏ.டி. ஆரியரட்ண நேற்றிரவு பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் வழங்கிய பேட்டியின் போது நம்பிக்கையை கட்டியெழுப்புவதே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஓர் முக்கிய அங்கமாகத் திகழும். எனவே அதற்கானஓர் நம்பிக்கை ஏற்படும் விதத்தில் நாம் செயற்படல் வேண்டும். நாம் நினைப்பது போல்விடுதலைப்புலிகள் பலவீனமான நிலையில் இருந்து கொண்டு இச் சமிக்கையைக் காட்டவில்லை.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் விடுதலைப்புலிகள் அமைப்பு பற்றி சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிமுகமானது அவர்கள் மிகவும் பயங்கரமான வன்முறை வாதிகள், யுத்தத்தை நாடுபவர்கள், ஆயுதத்தில் நம்பிக்கைகொண்டவர் என்ற விதத்திலே கொண்டுள்ள கருத்து முற்றிலும் தவறானது என்பதைவிளக்குகிறது. எமக்கு வேண்டியது சமாதானம்.

(3ஆம் பக்கம்)

# மண்ணைக் காப்பதுபோல் எமது மொழியையும் காக்க வேண்டும்

## -இளங்குமரன்

(நமது நிருபர்)

தூயதமிழ் பாவனை குறித்து நேற்று யாழ்மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் கலந்துரையாடல்ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை11 மணிக்கு யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்திரு. இளையவன்தலைமையில்நடை பெற்றஇக்கலந்துரையாடலில் தமிழீழக் கல்விக்கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, வித்துவான் சொக்கலிங்கம் ஆகியோரும் நாளிதழ், மாத இதழ் ஆசிரியர்களும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் இயன்றளவு தூய தமிழ் சொற்பாவனையை ஏற்படுத்துவதற்கான செயலாக்கத்தில் வானொலியும், நாளிதழ்களும் ஏனைய இதழ்களும் பங்காற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டது. வாணிப நிறுவனங்கள் தமதுபெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தலைமையுரை நிகழ்த்திய யாழ்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வீல் செயர் (Wheel Chair) பழையது விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரிக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும். தொடர்புகட்கு:- S. ஈஸ்வரன் 124, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (7493)

### அராலியூர் சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர். அவரது நாடகங்களைப் பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். "செட்டிக்காரர்கள்", முதலாம்பிள்ளை 30/-

(7368)

### பாலர் ஆசிரியர்

கடைசித் தகைமை க. பொ. த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர்சங்கம் உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(7520)

### முக்கிய அறிவித்தல்

மக்கள் தடுமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு மக்கள், அபிமானம் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீ சாந்தா அச்சகலேனிலேயே இயங்குகின்றது. (7502)

### விபூதிப் புதன் அனுஷ்டிக்கப்படும்

கத்தோலிக்க மக்கள் தமது மீட்பர் யேசுவின் பாடுகளை நினைவுகூரும் ஆயத்த நாளான 16.02.94 புதன் கிழமை விபூதிப்புதனை அனுஷ்டிக்க உள்ளார்கள் இந்நாளில் யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் யாழ் பேராலயத்தில் காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

### தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பு விளையாட்டுக் கழகத்தினரால் திவக கோட்டரீதியில் நடாத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டி 14-ம் [illegible]

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித் திட்டம்

வடமராட்சி கிழக்கிலிருந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மாதாந்த நிதி உதவித் திட்டமொன்றை வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் செயற்படுத்தவுள்ளது.

இவ் உதவித் திட்டத்தில் சேர்ந்து கொள்ள விரும்பும் பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களும் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நேரில் சமுகம் தந்து உரிய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து தருமாறு வேண்டுகின்றோம்.

இவ் விண்ணப்பப் படிவங்களைப் பெற்ற பின்பே மேற்படி திட்டத்தை முழுமையாக தயாரிக்க முடியுமென்பதால் 28.02.94ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தருமாறு வேண்டுகின்றோம்.

பொதுமுகாமையாளர்.
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
மருதங்கேணி.

(சி-8618)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி குமாரசாமி கலைவாணி

மலர்வு: 08-11-.959

உதிர்வு: 07 02-1992

திதி: 14-02-1994

கற்று நற்றாங்கு ஒழுகி
வாசம் வீசிட்ட மலரே—
நாம் பெற்றிட்ட நற்றவத்தின்
மாசோ? மறுவோ?......
மாசற்ற மலரே! எம்மைப் பிரிந்தது
ஈசன் உவந்திட்ட வரமோ!
எம்மைத் தேற்றுவார் யாரோ?!
உன்நினைவு மலர் வாசத்தில்
[illegible]

## மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க தையல், தட்டச்சுப் பயிற்சி மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் 19-02-94, 20-02-94 ஆகிய தினங்களில் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான இரண்டு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியானது, யாழ். மாவட்டத்தில் முன்னணியிலுள்ள பன்னிரண்டு விளையாட்டுக் கழகங்கள் மோதவுள்ளன. இம் முன்னணி விளையாட்டுக் கழகங்கள் மோதும் இக்காட்சியைக் கண்டு களிக்குமாறு சகல விளையாட்டு ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இப்போட்டி, உலக சுற்றுக்கிண்ணப் போட்டிகள் அமைப்பில் நடைபெற உள்ளது என்பதையும் இக்கழகங்களுக்கான மோதல்கள் போட்டி ஆரம்பமாகும் அன்று மத்தியஸ்தர்கள் முன்னிலையிலும் ரசிகர்கள் முன்னிலையிலும் குலுக்கல் முறையில் தீர்மானிக்கப்பட்டு போட்டி ஆரம்பமாகும் என்பதை இதன் விசேட அம்சமாக அறியத்தருகின்றோம்.

குறிப்பு: இப்போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டு விபரம் ரூ. 100/-, ரூ. 50/-, ரூ.25/-, பாடசாலை மாணவர்களுக்கு ரூ. 10/-

நன்றி

தலைவர்
வட பிராந்திய சுருட்டுத்
தொழிலாளர் சங்கம்

(சி-8607)

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14-வது இசைவிழா

### 3-ம் நாள் 14-2-94 திங்கட்கிழமை

### தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. ச. ஆதரவில்

மாலை

4. 30 - 5. 00 மங்கள இசை

| | |
|---|---|
| உதயநாதன்<br>ஆர். கோவிந்தராஜா<br>கே. சண்முகரத்தினம்<br>ஆர். சிவகுமார்<br>எஸ். தில்லைநாதன் | நாதஸ்வரம் |
| எ. சிவகுமார்<br>கே. மோகனதாஸ்<br>என். அம்பிகைபாகன்<br>கே. ராஜன்<br>கே. நாகேந்திரம் | தவில் |

5. 00 - 5. 10 மிருதங்க இசை

கே. கோபு, ஜே. ஆர். அரன், எம். முரளீதரன்

5. 10 - 5. 30 பாட்டு

பாலகௌரி யோகமணி
சுபாஷினி மயில்வாகனம்
ரோகினி அருளையா

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி. ஆர். ஆர். ஓ.) நடாத்தும்

## நீர் இறைக்கும் இயந்திர திருத்தல் பயிற்சி வகுப்புக்கள்

### ஆரம்பமாகின்றன

தகைமை: க. பொ. த. (சா. / தரம்) வரை படித்திருத்தல் வேண்டும்.

காலம்: 4 மாதம்.

இடம்: உரும்பராய் ரி. ஆர். ஆர். ஓ. உப காரியாலயம்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 16-2-94 புதன் காலை 9. 00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு: இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ரி. ஆர். ஆர். ஓ. உபகாரியாலயம்
மானிப்பாய் றோட்,
உரும்பராய்,
யாழ்ப்பாணம்.

(சி-8608)

## நினைவு கூருகின்றோம்.

### 1994-02-14

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளி - கரடிப்போக்குப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வாகனச் சாரதியான தமிழ் பொதுமகன்.

1987ஆம் ஆண்டு மட்டு - கிரான் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**துரை** (அழகிப்போடி மயில்வாகனம் - கிரான்-மட்டு)

திருமலை இலக்கந்தைப் பகுதியிற் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**பறக்கும் புறா** (— சிவஞானசுந்தரம் - சேனையூர்-திருமலை)

யாழ்-கைதடிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகனவெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**கவர்** (கதிர்காமு நகுலேஸ்வரன் - கோவில் புளியங்குளம், வவுனியா)

**மேஜர் கேடில்ஸ்** (மகாலிங்கம் திலீபன்-ஸ்கந்தாவாசா-கண்டாவளை-கிளி)

மத்தியகுழு உறுப்பினர்.

**லெப். கேணல் அற்புதன்-பொன்னம்மான்** (செல்லப்பா யோகரத்தினம் குகன்-கலட்டி-யாழ்)

**கப்டன் வாசு** (உருத்திராபதி சுதாகர்-நெடியகாடு, வல்வெட்டித்துறை-யாழ்)

**லெப். சித்தார்த்தன்** (வைத்திலிங்கம் வசீகரன்-20 சுவாட்ஸ்வீதி, கண்டுக்குளி-யாழ்)

**2-ம் லெப். பரன்** (கிருஷ்ணர் அருச்சுனன்-கொண்டக்கட்டை ஒழுங்கை, வல்வெட்டித்துறை-யாழ்)

**யோகேஸ்** (சுந்தரம் தனபாலசிங்கம் -ஆழியவளை, தாளையடி-யாழ்)

**தேவன்** (தம்பிப்பிள்ளை வசந்தகுமார்-மீசாலை, சாவகச்சேரி-யாழ்)

**குமணன்** (சந்தையா மோகனலிங்கம் - மட்டுவில் தெற்கு சாவகச்சேரி-யாழ்)

**அக்பர்** (அருளம்பலம் யோகநாதன்-மட்டுவில்தெற்கு, [illegible]

ரீதியில் நடாத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டி 14-ம் திகதி திங்கள் (இன்று) காலை தொடக்கம் குடியிருப்பு மைதானத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 19-ம், 20-ம் திகதிகளில் (எதிர்வரும் சனி, ஞாயிறு) நாவற்குழி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

உன்னினைவு மலர் வாசத்தில்
வசந்தங்கள் இரண்டு
நீர்த்திரையிட்ட விழிகளில்
மறைந்தனவே...
மலரே! தொடரும் உன் நினைவில்
வாழும்

கல்வயல், சாவகச்சேரி. — அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

(7514)

## மும்மணிச் சகோதரர்களின் நினைவலைகள்

| எட்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| 2-ம் லெப். சின்னக்கோபு | செந்திவடிவேலு மணிவண்ணன் (மணி) | 2-ம் லெப். சபேசன் |
| செந்திவடிவேலு சிறீதரன் | | செந்திவடிவேலு ரஞ்சித்குமார் |
| வல்வை | வல்வை | வல்வை |
| பிறப்பு 02-09-66 வீரச்சாவு 06-04-86 | பிறப்பு 19-04-69 மரணம் 17-02-91 | பிறப்பு 12-05-72 வீரச்சாவு 05-08-90 |
| திதி: 08-04-94 | திதி: 14-02-94 | திதி: 21-07-94 |
| பொங்கி யெழுந்தாய்புயலாக பகைவர் படை யழிப்பதற்கே எங்கிருந்தோ பகைவன் வைத்தகுறி எமைவிட்டும்மை பிரித்ததுவே | மண்மீது கொண்ட பாசம் மரணத்தில் முடிந்ததுவோ விண் மீதிவிரைந்த ஷெல் தான் எமைவிட்டும்மை பிரித்ததுவே | அண்ணன் வழிநடந்து ஆயுதத்தை ஏந்திநின்றாய்-கோட்டையிலே விண்ணதிரபோர்புரிந்து-பகை வீழ்த்திட நீ விதையானாய் |

தற்போதைய முகவரி
''பொன்னாவில்லா''
இமையாணன் வடக்கு,
வல்வெட்டித்துறை

தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரி, உறவினர்கள் நண்பர்கள்.

(7517)

ரோகினி அருளையா
தாட்சாயனி சிவஞானம் — பாட்டு
கே. சுபத்திரா - வயலின்
எஸ். ஹரிதரன் - மிருதங்கம்

**5. 30 - 5. 50 புல்லாங்குழல்**

கே. விஜயதாசன்
எஸ். விஜேந்திரன் — புல்லாங்குழல்
எஸ். சர்வேஸ்வரசர்மா - வயலின்
எஸ்- நாகராஜன் - மிருதங்கம்

**5. 50 - 6. 10 பாட்டு**

கு சுபிதா, தி. கீதா, இ. அஷ்டலக்ஷ்மி
கோ. கமலாஜோதி, சி. சரோஜினி,
சூ லொய்ஸ்களிசியா
ச. சுஜித்திரா - வயலின்
ப. ரதிரூபன் - மிருதங்கம்

**6. 10 - 6. 30 வயலின் இசை**

சி. சுகன்யா, ச. சுஜித்திரா, கு. சுகிர்தா.
ரா. ஜசிந்திரா, த. சந்தானலஷ்மி, சி. கலைவாணி
பமினி வஸ்த்தலா சி அகிலன், ந. ரமணன்
சதா வேல்மாறன் - மிருதங்கம்

**6. 30 - 7. 00 பாட்டு**

ராஜஸ்ரீ பசுபதீஸ்வர சர்மா - பாட்டு
சுபத்திரா கணேசன் - வயலின்
பி. ரதிரூபன் - மிருதங்கம்

**7. 00 - 7. 30 மங்களவிளக்கேற்றல்**

1. திரு செல்வராஜா (பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை எம். பி. சி. எஸ்)
2. திரு. க. சிவபாலன் (கே. கே. கே. வர்த்தகர்)
3. திரு. இராமநாதன் - பாலா A.G.செல்வராஜா (செல்வா எரிபொருள் நிலையம்)
4. பிரம்மஸ்ரீ வெ. ரகுநாதஐயர்

தலைவர்:- திரு. நா. தவநாதன் (தலைவர் ப. நோ-கூ சங்கம்)
பிரதம விருந்தினர்:- திரு. நா. சுப்பிரமணியன் (முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை)
சிறப்பு விருந்தினர்:- திரு. ப. கனகரத்தினம் (அளவெட்டி ப.நோ.கூ. சங்கம்)

**7. 30 - 8. 30 இசைக்கச்சேரி**

வி. சிவஞானசேகரம்- பாட்டு
வி. கே. குமாரசாமி - வயலின்
கே. கஜன்- மிருதங்கம்
ரி. தபோதநாயகம் - கடம்

**8. 30 - 9. 30 கதகளி ஆடல்**

''கலைக்கோயில்'' வேலானந்தன் ஆடல் மன்றம்

வாழ்த்துவோர்

**மணியம் ஸ்ரோர்ஸ்**

பலாலி றோட், திருநெல்வேலி.

(சி-8620)

இதே சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள்,

1988-ம் ஆண்டு பூநகரி, வெட்டுக்காட்டுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**தர்மேந்திரா** (இராசதுரை றொபேட் கெனடி-டேவிட்வீதி, குருநகர்-யாழ்)

1989-ம் ஆண்டு மணலாறு-குமுழமுனைப் பகுதியில் இந்தியப்படையினரின் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் மோகன்** (சிவகுமார் - குணலிங்கம்-புதுக்குடியிருப்பு-மணலாறு)

1991-ம் ஆண்டு மட்டு-மணற்பிட்டி சிறிலங்கா இராணுவமினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப். தயானி** (தாமோதரம்பிள்ளை கிருபானந்தலிங்கம்-ஆரையம்பதி-மட்டு

**முகேஷ்** (சித்தாண்டி-மட்டு)

1992-ம் ஆண்டு மட்டு - உன்னிச்சைப்பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்டசமரில் வீரச்சாவெய்திய,

**நிவாஸ்கர் சீதரன்** (கணபதிப்பிள்ளை நித்தியதாஸ்-திருக்கோயில்-அம்பாறை)

**மேஜர் லத்தீப் ரவிநாதன்** (கந்தையா சண்முகநாதன் கிரான்-மட்டு

**லெப். போசன்** (நல்லசாமி வோதிதாசன் - கல்முனை-அம்பாறை)

**லெப். கலாதரன்** (இரத்தினசிங்கம் தேவநேசன்-முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**2-ம் லெப். மார்க்கோஸ்-ஆனந்தலோகன்** (கந்தசாமி கமலநாதன்-வாழைச்சேனை-மட்டு)

**விஸ்வலிங்கம்** (பூபாலப்பிள்ளை கிருஷ்ணானந்தன்-கிரான்-மட்டு)

**றோசான்—சசிக்குமார்** (நாகையா ரவிசங்கர்-முகத்துவாரம்-மட்டு)

**ஜெயநாதன்** (கைலாயபிள்ளை நடேசலிங்கம்-வாழைச்சேனை-மட்டு)

**குணா** (கணபதிப்பிள்ளை செல்வராசா-சித்தாண்டி-மட்டு)

**டானியேல்-ஆனந்தன்** (வேல்முருகு செல்வராசா-கிரான்-மட்டு)

**பழனி** (தங்கராசா தயாபரன்-குருக்கள்மடம்-மட்டு)

**யாவீர்** (முத்தையா ஜெயநாதன்-மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✿ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8621)

சிந்தனைக்கு

அதிகாரம் வளர வளர அதைத் தவறாகப் பயன் படுத்துவதில் உள்ள ஆபத்தும் வளர்கிறது.

-- எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# சுவை கண்ட இராணுவம்

சிறிலங்கா இராணுவ அதிகாரிகளின் கவனம் தற்பொழுது இராணுவ விவகாரங்களை விட அரசியல் விவகாரங்களின் பக்கம் திரும்பியுள்ளதாக அரசாங்க உயர் அதிகாரிகள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர். அது தொடர்பாக விசனமும் கொண்டுள்ளனர். அத்தோடு, இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மோசடிகள் இடம்பெறுவதாகவும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

'விரலுக்கு மிஞ்சிய வீக்கம்' என்பதுபோல் ஒரு நாட்டின் அளவிற்கும், மக்கள் தொகைக்கும் ஏற்ற அளவினதான இராணுவமே எப்பொழுது அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாகவும், அரசாங்கத்தினால் வழிநடத்தக் கூடியவையாக இருக்கும் என்பதே உலகப்படிப்பினையாகும். இவற்றை மீறினால், இராணுவத்தை அரசாங்கம் வழிநடத்துவது போய், இராணுவம் அரசாங்கத்தை வழிநடத்தத் தொடங்கி விடும்.

மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் இவை இன்று இது ஒரு பொதுவான அம்சமாக வளர்ந்து வரினும், ஆசியாவில் பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் சிறப்பான உதாரணங்களாகக் கொள்ளக் கூடியவை. பெயரளவில் ஜனநாயக அமைப்பு முறைகளைக் கொண்டவையாக இந்நாடுகள் இருப்பினும் அவ் அரசாங்கங்களை பலம் பொருந்திய இராணுவமே கட்டுப்படுத்துகின்றது. அதாவது, ஆட்சியாளரைத் தீர்மானிக்கும் ஆற்றல் அந்நாட்டு இராணுவங்களுக்கு உண்டு.

இந்தவகையிலேயே இன்று சிறிலங்கா இராணுவமும் வளர்ந்து வருகின்றது. அரசாங்கத்தை ஓரளவு தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறிவிட்டது இராணுவத்தின் ஆதரவு இல்லாதவர்கள் இன்று சிறிலங்கா ஆட்சி அதிகாரத்தில் ஏற முடியுமா என்பதும், ஏறினும் அவர்களால் ஆட்சி நடத்த முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

# 60 தங்க பிஸ்கட்டுகள் கடத்திய பெண் கைது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த இலங்கைப் பெண்மணி யொருவர் 41 லட்சம் ரூபா பெறுமதியான 60 தங்க பிஸ்கட்டுகளை கடத்திவர முற்படுகையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிக்கினார்.

விமான நிலையத்திலிருந்து தப்பட்டிருந்த காரொன்றில் ஏற முற்படுகையில் பொலிஸ் போதைவஸ்து தடுப்பு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார். தங்க பிஸ்கட்டுகள் இவரது உடலில் கட்டப்பட்டிருந்தன.

தங்க பிஸ்கட்டுகளை பறிமுதல் செய்த சுங்கப்பகுதியினர் 1 கோடியே 23 லட்சம் ரூபா அபராதம் விதித்தனர். அபராதத் தொகை செலுத்தத் தவறியதால் இட்டெண் மணி கட்டுநாயக்கா பொலிசாரிடம் கையளிக்கப்பட்டார்.

கிராம சேவையாளருக்கு

# தீர்வையற்ற விலையில் மோட்டார் சைக்கிள்

(கொழும்பு)

கிராம சேவை அதிகாரிகளுக்கு தீர்வையற்ற விதத்தில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவில் உள்ள பதினையாயிரம் கிராம சேவை அதிகாரிகளுக்கு புதிய சம்பள முறை விரைவில் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் இதன் மூலம் இவர்களுக்குள் இருந்து வந்த சம்பள முரண்பாடுகள் நீங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவரிடையே செயன்முறைப் போட்டி

யாழ்: வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சைவ அபிவிருத்திக் கழகத்தினர் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் முதலான துறைகளில செயன்முறைப் போட்டி ஒன்றினை மாணவர்களுக்கிடையே நடாத்தவுள்ளனர்.

ஆண்டு 1—5, ஆண்டு 6—8, ஆண்டு 9க்கு மேல் என்னும் வகுப்புக் கட்டுப்பாட்டுக்கமைய முறையே கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய மூன்று பிரிவு மாணவர்களுக்கிடையே இம்மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுமெனவும் ஏனையோர்க்கு சான்றிதழ்கள் வழங்கப்படுமெனவும் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தெரிவித்தார்.

# புகையிரத கடவை ஊழியர்; வேதனம் இல்லை

(குருநகர்)

யாழ் - புகையிரதக்கடவை ஊழியர்கள் 353 பேர்களுக்கு 92 - 93 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வேதனம இதுவரை கிடைக்கவில்லை.

யாழ் அரச அதிபரிடம் மேற்படி ஊழியர்கள் இரண்டு ஆண்டுகளுக்குமான வேதனக் கொடுப்பனவுகளை பெற்று வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக் கழக

# துணைவேந்தரைப் பாராட்டி வடமராட்சியில் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. துரைராஜா அவர்களின் கல்விப் [illegible] வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதி நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை, மார்ச்

## இடநெருக்கடி

யாழ். மாவட்ட மருத்துவ மனைகளில் இடநெருக்கடி ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் பெய்த மழையை அடுத்து நுளம்புப் பெருக்கத்தால் மலேரியா - செப்ரிசீமியா போன்ற நோய்கள் குடாநாட்டு மக்கள் மத்தியில் அதிகரித்து வருவதனால் மருத்துவ மனைகளில் உள்ள கட்டில்கள் நிரப்பி நோயாளர்கள் நிலத்தில் தங்க வைக்கப்படும் அளவுக்கு யாழ். மாவட்ட மருத்துவமனைகளில் இடநெருக்கடி தோன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21

## உறவினர்

தற்போது நீர்கொழும்புப் பகுதியில் வாழும் தமிழர்கள் வீடுகளில் நடக்கும் திருமணம், மரணம் மற்றும் வைபவங்களில் உறவினர்கள், நண்பர்கள் கலந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வரும் உறவினர்கள் மாலைக்குள் திரும்பிவிட வேண்டும். பஸ் இல்லாததாலோ அல்லது வேறு காரணங்களாலோ அங்கு அவர்கள் தங்கினால் யாராவது போய் பொலிசில் புகார் கொடுத்ததும் வீட்டு உரிமையாளர் கைதாகிறார் எனதெரிகிறது

## மன்னனை

மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் இளையவன் உரையாற்றும் போது விடுதலைப் போரை நடத்திக் கொண்டிருக்கும் நாம் அதே நேரம் எமது மொழிக்கான விடுதலையையும் ஏற்படுத்த வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இலங்குமரன் உரைநிகழ்த்துகையில் தலைவர் மண்ணையும் மக்களையும் காப்பாற்றப் போராட்டம் நடாத்தி வருகின்றார். அதே வேளை எமது விழிபோன்ற மொழியினைப் பேணுவதற்கு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார் அதற்கெனவே கல்வி வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. எமது இனம் தாழ்ந்ததற்கு முதற்படியாக எமது மொழி தாக்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழில் 70 விழுக்காட்டிற்கும் கூடுதலான பிற மொழிச் சொற்கள் கலந்துள்ளன. மொழி பாதுகாக்கப்படா விட்டால் எம்இனம் அழிந்துவிடும். மொழியின் மீது பற்று வைக்காவிடின் எம்மை நாமே அழிக்கும் நிலை தோன்றும் எனத் தெரிவித்தார்.

தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி உரை நிகழ்த்துகையில தமி

கொக்கட்டிச் சோலையில்

# ஐ. தே. க. ஆதரவாளர் சுட்டுக் கொலை

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் கொக்கடிச் சோலை நகரம் அருகே சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு உள்ளூராட்சி தேர்தல் பிரசார வேலையில் ஈடுபட்டிருந்த போது இவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொலைப்பட்டதாகவும் தேர்தல் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் விடுதலைப்புலிகள் தனித்தனி எச்சரிக்கைக் கடிதத்தை ஏற்கனவே அனுப்பி வைத்திருப்பதாகவும் இந்திய வானொலி கூறியது

## பிரச்சினைக்கு

பேச்சுவார்த்தை மூலம் சமாதானரீதியாக எமது உரிமைகளைப்பெற்று வாழவே விரும்புகின்றோம் எனக் குறிப்பிட்டதோடு, இச் செய்தியை சிங்கள மக்களுக்கு தெரிவிக்குமாறு என்னிடம் வேண்டினார்.

இவ் இரு பகுதியினரிடையே முக்கியபிரச்சினையாக இருப்பது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமையே இதற்கு பொய்யான பிரசாரங்கள் உருவாக்கிய அவநம்பிக்கைகளே காரணம் என்பதே எனது கருத்து. எனவேதான் நம்பிக்கை கட்டியெழுப்புவது தான் சமாதான திட்டத்தின் ஒர் முக்கிய அங்கமாக இருக்கின்றது எனது உயர்ந்த நம்பிக்கை விடுதலைப்புலிகளின் கருத்து மிக நேர்மையான ஒருஉறுதியான அறிவிப்பாகவே நான் கருதுகின்றேன். நான் பலரை சந்தித்துள்ளேன் எனவே ஓரளவு அவர்களின் விடயங்களை கணிப்பீடு செய்ய முடியும் இது எனது அனுபவம். எனவே இவர்களின் இவ் அறிவிப்பு மிக நேர்மையானது எனக் கருதுகின்றேன் எனவும் தெரிவித்தார்.

சில சில பிரச்சினைகளினால் நம்பிக்கை உடன்பாடுகள் முறிக்கப்பட்டதுதொடர்பாக கரிகாலனிடம் தெரிவித்தேன். இதே போன்றே அரசாங்கமும் நடந்ததாக அவர்கள் தெரிவித்தார்கள். எனவே இந்த நிலை இரு பகுதியினருக்கும் பங்குண்டு. எனவே இவற்றை கிளறுவதினால் சமாதானம் நோக்கி நாம் செல்ல முடியாது. எனவே அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதே மிகவும் முக்கியமான விடயம் என்றார்.

சிங்கள மக்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் தமிழ் மக்களின் நிலையென்ன? அவர்களின் பிரச்சினை என்ன என்பதை. இதேபோல தமிழ் மக்களும் யோசிக்க வேண்டும் சிங்கள மக்கள் என்னதை சிந்திக்கிறார்கள் என்று. எனவே இரு

அங்கு செல்லாது இங்கு இருந்த நிலையில் கண்ணுக்கு புலனாகாத கற்பனையே அவர்கள் பலவீனம் அடைந்துள்ளதாக கூறும் விடயம். எனவே இவ்வாறான பிரசாரங்களினால் இவை மேலும் சிக்கல் அடையும். எனக்கு காயமடைந்த சிப்பாய்களை சந்திக்க அவர்கள் அனுமதி தந்தார்கள், சுதந்திரமாக கதைக்க அனுமதி தந்தார்கள் எனது கண்ணால் கண்டேன். யாழ் வைத்தியசாலை டாக்டர்கள் எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் இவர்களின் உயிர்களை காப்பாற்றியுள்ளார்கள்.

எனவே தெரியாது ஒன்றை கதைத்துகொண்டு யுத்தத்தை பற்றி கதைத்துகொண்டு இருக்கிறார்களே தவிர சமாதானத்தை பற்றி கதைப்பதாக தெரியவில்லை. எனவே யுத்தத்தினால் பல அழிவுகள் ஏற்படுகின்றது.

யுத்தத்தினால் மட்டும் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என பல சிங்களவர்கள் விரும்புகின்றார்கள். எனவே இது தொடர்பாக அரசாங்கத்திற்கு அவ் அமைப்புக்கள் பல நெருக்குதல்களை கொடுத்து யுத்தத்தினால் தீர்க்குமாறு வற்புறுத்துகின்றன. இவர்களுக்கு நான் மிக தெளிவாக கூறுகின்றேன். யுத்தத்தினால் பல வீணப்படுத்த முடியாது. அவர்கள் யுத்தத்திற்கு செல்லும் போது மரணத்தை உறுதிபடுத்தி செல்கின்றார்கள், எமது சிப்பாய்கள் வீட்டு கஷ்டங்களுக்காகவும் உழைப்புக்காகவும் செல்கிறார்கள். எனவே இருதரத்தினரின் நிலைகள் வேறு என்பதை உணர வேண்டும்.

மேலும் இவ்வாறு கதைப்பவர்கள் யுத்தத்திற்கு செல்பவர்கள் இல்லை அல்லாதுவிடின் இவர்கள் இராணுவத்தில் சென்று யுத்தத்திற்கு செல்ல வேண்டும். கஷ்டமான பகுதிகளுக்கு செல்ல வேண்டும். சிங்கள இனத்தை காப்பாற்ற செல்ல வேண்டும். அவ்வாறு சொல்பவர்கள் அங்கு செல்வதில்லை. சொல்வது மிக இலகுவானது

அதிகாரத்தில் ஏற முடியுமா என்பதும், ஏறினும் அவர்களால் ஆட்சி நடத்த முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

இலங்கைத்தீவைத் தனது ஆள்புல எல்லையாகக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுதே ஒருபகுதியை - வடக்கு - கிழக்கு - இராணுவத்தின் பரிபாலனத்திற்கென ஒப்படைத்துள்ளது. இதில்; எந்தளவு பகுதியை இராணுவம் ஆள்கின்றது? ஆட்சி அதிகாரம் செய்கின்றது, என்பது கேள்விக்குரியதாயினும், வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் சுவையை இராணுவம் தெளிவாகவே கண்டுகொண்டுள்ளது. அனுபவித்து வருகின்றது

பெயரளவில் சிவில் நிர்வாகம் பற்றி சிறிலங்கா அரசாங்கம் பேசிக் கொள்ளினும், இராணுவத்தின் முடிவே முடிந்த முடிவாகவும், இறுதி முடிவாகவும் உள்ளது. இராணுவத்தினர் அரச சிவில் அதிகாரிகள் இராணுவத்தின் பணிப்புகளுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றனர். இப்பகுதியின் விநியோகங்களும் முற்றாகவே இராணுவத்தினரால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுபவையாகவும் உள்ளன. சுருக்கமாகக் கூறுவதானால் சிவில் நிர்வாகம் தொடக்கம், தேர்தல் வரை இராணுவமே நடத்துகின்றது.

மேலும், சிறிலங்காவின் பெரும்பகுதி வளத்தை நுகரும் ஒன்றாகவும் இராணுவம் உள்ளது, சுமார் 3000 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகை பணத்தையும், பல வளங்களையும் இராணுவம் நுகர்கின்றது. இதனால் பல மோசடிகளுக்குமே வாய்ப்பு உருவாகின்றது. இவ் ஒதுக்கீடுகளே இன்னும் போதாது என்னும் குரல் எழுப்பப்படுகின்றது.

இவ்வாறாக, அதிகாரத்தையும், வளத்தையும் நுகர்ந்தும் சுவைத்தும் பழகிவிட்ட இராணுவம். மேலும் அதிகாரத்தையும், வளத்தையும் நுகர்வதில் ஆவல் கொள்வதில் ஆச்சரியப்பட ஏதுமே இல்லை. ஆனால், சிறிலங்கா இராணுவம் இதுவரை இவ்வாறான செயல்களில்பெரியளவில் ஈடுபடாமை சிலவேளை ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாக இருக்கலாம்,

இந்தவகையில், சிறிலங்கா இராணுவம் இன்னமும் தனது பலத்தைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், அல்லது புற அச்சுறுத்தல்கள் ஏதாவது ஏற்படுமோ என்ற அச்சத்தில் தமது செயற்பாட்டைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கலாம். ஆனால், சுவை கண்ட இராணுவம் அரசியல் அதிகாரத்தைச் சிறிதளவாயினும் அனுபவிக்க முற்படுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல. சிறிலங்காவின் இன்றைய நிலையில், அதாவது ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்த இராணுவத்தை நம்பியிருக்கும் ஓர் அரசால் தடுத்து நிறுத்தி விடக் கூடியதும் அல்ல.

---

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா அவர்களின் கல்விப் பணியைப் பாராட்டி வடமராட்சி மக்கள் சார்பில் அவருக்கு ஒரு விழா நடத்த ஏற்பாடாகியுள்ளது. இந்தவிழா வரும் மார்ச் மாதம் 23ஆம் திகதி நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதேவேளை, மார்ச் மாதத்துடன் துணைவேந்தர் தமது பதவியில் இருந்து விலகிச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

அழிக்கும் நிலை தோன்றறாம் எனத் தெரிவித்தார்.

தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி உரை நிழ்த்துகையில தமிழீழ விடுதலைப் போராட்டம் மொழி ஒடுக்கு முறையினால் தோற்றம் கண்டது. இது இன்று எமது மண்ணின் விடுதலையை நோக்கியதாக நடைபெறுகிறது.

இதேவேளை எமது மொழியும் விடுதலை அடைய வேணடும். எமது வரலாற்றை நோக்கும்போது மொழி திரிவடைந்து இருந்ததால் தான் தமிழர்கள் ஆட்சியை அமைக்க முடியாதிருந்தனர்.

எமது நாடு விடுதலை அடையும்போது மொழியும் விடுதலை அடைய வேண்டும். எனவே நாம் நாடு விடுதலை பெறுவதற்கான போராட்டத்தையும் எமக்கு நாமே மொழி விடுதலைக்கான முயற்சிகளையும் ஒருங்கே மேற்கொள்ள வேணடும்,என்றார். பிற மொழிக் கலப்பு தூய தமிழ் பிரயோகத்தின் சிக்கல்கள் அதற்கான அவசியம்என்பன குறித்து வித்துவான் சொக்கலிங்கம் உரையாற்றினார்.

...ின்னை ...என்பதை. இதேபோல தமிழ் மக்களும் யோசிக்க வேண்டும் சிங்கள மக்கள்என்னதை சிந்திக்கிறார்கள் என்று.எனவே இரு தரத்தினரும் சந்தித்து பரஸ்பர பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது பலவீனமான நிலையில் தான் சமாதான பேச்சுக்களை விருப்புகின்றார்கள் என்று எண்ணுவதுமுற்றிலும் தவறு. விடுதலைபபுலிகள் பலவீனம் அடைந்திருந்தார்கள் எனில ஏன் எம்மவர்களினால் அப்பகுதியை தமதுகட்டுபாட்டிற்குகொண்டுவர முடியவில்லை. அவர்கள் பலமாக இருப்பதினால் அவ்வாறு செய்யமுடியாது இருக்கின்றார்கள். எனவே அவர்கள பலவீன நிலையில் இல்லை என்பதே உண்மை. எனவே இவை ஆதாரமற்ற செய்திகள அல்லது பிழையான தகவல்என்றே கூற முடியும்.

வேண்டும. சிங்கள இனத்தை காப்பாற்ற செல்ல வேண்டும். அவ்வாறு சொல்பவர்கள் அங்கு செல்வதில்லை. சொல்வது மிக இலகுவானது நேரில் சென்று பார்த்தால் தான் உண்மை தெரியும். இவர்களும் உண்மையான யுத்த நிலை தெரிந்தால் யுத்தம் வேண்டாம் என்றே கூறுவார்கள். எமது அரசாங்கமும், இராணுவத்தினரும் யுத்தம் செய்ய வேண்டிய ஓர் நிர்பந்தத்தில் தான் இன்று யுத்தம் செய்கின்றார்கள் அவ்வளவு தூரம் யுத்தத்தினால்பாதிப்பு இன்று ஏற்பட்டுள்ளது இது தான் உண்மையான நிலை யென்றார் மேலும் யுத்தம் தொடர்பாக கதைக்காமல் சமாதானம் தொடர்பாக கதைப்பதே இன்று இனத்திற்கு அவர்கள் செய்யும் ஓர் நற்பணியாக கருதுகின்றேன் எனறார்.

---

# பெ.தோட்டங்கள் கம்பனிக்கு நீண்டகால குத்தகைக்கு

## டி.பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

குறுகிய கால தவணையில் கம்பனிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பெருந்தோட்டங்களின் தவணைக்காலம் நீண்டகாலத்திற்கு நீடிக்கப்படும் இதற்கான முடிவை அரசு விரைவில் மேற்கொள்ளும் என்று சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கூறியுள்ளார்.

கொழும்பு தேயிலை வியாபாரிகள் சங்கத்தின் நூற்றாண்டு விழா கொழும்பு மரியாட்ஹோட்டலில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேலும் கூறுகையில், தேயிலை உற்பத்தி பற்றி நாம் புதிய சிந்தனையை மேற்கொண்டு புதிய உற்சாகத்தை ஊட்ட வேண்டும்.

பெருந்தோட்டங்களை நீண்டகால குத்தகைக்கு தனியார் கம்பனிகளுக்கு விடுவது தொடர்பாக அமைச்சர் தொண்டமானும், அவர் தலைமையிலான இ.தொ.காவும் எதிர்ப்பு தெரிவித்து வந்தமை தெரிந்ததே.

---

# பிரதமர் பெனாசீருக்கு எதிராக இந்தியத் தலைமை பிரசாரம்

## -பாகிஸ்தான் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோவுக்கு எதிராக இந்தியத் தலைமை அவதூறு செய்யும் இயக்கத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இது பற்றி குறிப்பிடுகையில், இந்தியத் தலைவர்கள் ஆபாச மட்டத்திற்கு இறங்கியுள்ளனரென்றும் தெரிவித்தார்.

இந்தியத் தலைமைகளின் இத்தகைய பிரசாரங்கள் தொடர்பாக ஐந்து நாட்களில் இரண்டாவது தடவையாகவும் தூதுவர் மூலமாக பாகிஸ்தான் தனது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளது.

இந்திய உப கண்டத்தின் கலாசாரம் மற்றும் யதார்த்தம் ஆகியவற்றுடன் திருமதி பூட்டோ தனது தொடர்புகளையும், ஆழமான பார்வைகளையும் இழந்துள்ளாரென்று இந்தியக் குடியரசுத் தலைவர் தமது குடியரசுதின உரையின்போது குறிப்பிட்டதும் இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் சல்மார் குர்ஷித் திருமதி பூட்டோவை மோசமாகத் தாக்கிப் பேசியிருப்பதும் தெரிந்ததே.

இந்தியா மேற்கொள்ளும் இத்தகைய அவதூறு பிரசாரங்களால் ஜம்மு காஷ்மீர் மக்களின் போராட்டத்தை உலகின் கவனத்திலிருந்து திசைதிருப்பிவிட முடியாது என்றும் சொன்னார்.

திருமதி பூட்டோ கடந்த வாரத்தில் மேற்கொண்ட சரஜேவோ விஜயத்தை சேர்பியர்களின் தாக்குதலால் தடுத்துவிட முடியாததுபோல காஷ்மீர் மக்களின் நீதியான இலட்சியத்திற்காக திருமதி பூட்டோ நடத்தும் இயக்கத்தை தடுத்துவிட முடியாது என்றும் தெரிவித்தார்.

---

## கடவுச்சீட்டு

னர். எனினும் பொலிசார் எதுவித நடவடிக்கையும் எடுக்காததையடுத்து அவர்கள் இது குறித்து "ஸ்டார்" பத்திரிகைக்கு தகவல் வழங்கியிருந்தனர். இதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பத்திரிகை நிருபர்கள் இருவர் அங்குதயாரிக்கப்பட்ட பாஸ்போட் மற்றும் போலி ஆவணங்களைக் கண்டுபிடித்தனர் இதுபற்றிய செய்திஸ்டார் பத்திரிகையில் வெளிவந்ததும் பொலிசார் சபாநாயகத்தைக் கைதுசெய்தனர். இதனையடுத்து போலிக் கடவுச்சீட்டுகளை அச்சிடும் 15 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதேவேளை கனடிய அரசு புதிய கடவுச் சீட்டுகளை அச்சடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

---

## வீடியோ

கடந்த வாரம் நடந்த வாய்த் தர்க்கத்தினை அடுத்து மனைவி வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாராம்.

மனைவி அங்கிருந்து சென்றதை அடுத்து ஆனந்தரூபன் தமது அறையில் தன்னைத்தானே தூக்கில் இட்டுக் கொண்டாராம்.

தூக்கில் இட்டுக் கொள்வதற்கு முன் வீடியோ புகைப்படக் கருவியை கயிற்றினை நோக்கி படம் எடுக்க வைத்தாராம்.

ஆனந்தரூபனின் அறையை உடைத்துத் திறந்த பொலிசார் கமரா இயங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தனர்.

அங்கு ஒரு கடிதமும் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. தான் துடிதுடித்துச் சாவதை தனது மனைவி பார்க்கவேண்டும் என்பதற்காக வீடியோ கமராவை இயக்கி வைத்துள்ளதாக எழுதியிருந்தாராம்.

பொலிசார் அக் கமரா மூலம் ஆனந்தரூபன் தற்கொலை செய்து கொண்டார் என்பதை உறுதி செய்து கொண்டனர்.

களத்தினிலே உரமாக விதைத்தோமென்று
எண்ணி நாம் ஆறுகின்றோம்.

## 29-ம் பிறந்ததின நினைவலைகள்



தோற்றம்;
14 - 02 - 1965

வீரச்சாவு;
12 - 11 - 1993

### மேஜர் பூவழகு (விக்கி)

இராணுவ தொழில் நுட்பப்பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்;
(சண்முகநாதன் விக்னேஸ்வரன்)
நயினாதீவு.

நன்றுநீர் எம்மண்ணின் விடுதலைக்கும்
நலமாக நம்மக்கள் வாழ்வதற்கும்
சென்றுநீர் உம்வாழ்வை அர்ப்பணித்தீர்
செறிந்தநும் தொழில்நுட்ப அறிவினாலே
வென்றுபோர் முடிக்கநல் ஆயுதங்கள்
வெடிரவைகள் தந்துபல் வெற்றி கண்டீர்
இன்றுநீர் எம்ஈழ மண்ணில் இல்லை
என்சொல்லி உம்பிரிவை நாமாற் றுவோம்

பெருவலிமை கொண்டுநீர் நிலத்தி லெல்லாம்
பெருவெற்றி தந்ததொழிற் திறமை கண்டு
அருமைமிகு தலைவனுனை அவையி லேற்றி
ஆற்றலினைப் போற்றிப்பல பரிச ளித்துப்
பெருமைகொள வைத்துநிழற் படமெ டுத்துப்
பிரியமுள தம்பியென உரிமை கொண்ட
அருமையினை நீவிபத்தால் மறைந்த பின்னே
அறிந்துநாம் கண்ணீரில் மிதந்து நின்றோம்

மண்ணினிலெம் மடிமீது தவழ்ந்து வந்து
மகிழிருபத் தொன்பதாம் அகவை தன்னில்
எண்ணில்புகழ் துணிவுடனே வீரம் கொண்ட
ஏற்றமிகு மோர்மகனைப் பெற்று நாங்கள்
கண்ணெனவே போற்றீழ விடுதலைக்காய்
களத்தினிலே உரமாக விதைத்தோ மென்று
எண்ணிநாம் ஆறுகின்ற இந்த நாளில்
இறந்தமா வீரருக்கும் எம்வணக்கம்.

54, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(7518)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசுக்கு மனவலிமை இல்லை

### வாசுதேவநாணயக்காரா

(கொழும்பு)


இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற மனவலிமை அரசுக்கு ஏற்படாதவரை இனப்பிரச்சினைக்கு முடிவுகிட்டப் போவதில்லை.

இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவரான வாசுதேவ நாணயக்காரா கூறியுள்ளார்.

தென்மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக கொழும்பு நிப்பொன் ஹொட்டலில் செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை நடத்திய அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்காமல் அரசு யாருடனும் எப்படிப் பேச்சுநடத்தினாலும் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை. பிரச்சினையை தீர்ப்பதற்கான மனத்திடம் ஏற்படாதவரை பிரச்சினைக்கு தீர்வுகிடையாது; எனவே மத்தியஸ்தர்கள் யாழ்ப்பாணம் சென்று புலிகளின் செய்திகளை கொண்டு வந்தாலும் பிரச்சினைக்கு தீர்வுகாணும் மனவலிமை ஏற்படாத நிலையில் இனப்பிரச்சினைக்கு முடிவு வரப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட தென் மாகாணசபையின் வேட்பாளர் வண. பத்தேகம சமித்த தேரோ கூறுகையில், தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைக் கிளர்ச்சிகொள்ள வைக்கும் உரைகள் நிகழ்த்தப் படுகின்றன. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனத்துவேசம்கொண்ட தலைவர்கள் ஒன்று சேருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

## 7-ம் ஆண்டு நினைவு நாள்



### லெப். கேணல் பொன்னம்மான்

[யோகரத்தினம் குகன்]

மண்ணில் உதித்தது விண்ணில் மறைந்தது

**23.12.1956 14.02.1987**

நாவற்குழி சிங்களப் பாசறை தகர்க்கும் முயற்சியில் எதிர்பாராமல் பொன்னம்மானுடன் வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த போராளிகளையும், கூடவே உயிர் நீத்த திரு. வே. சிவனேந்திரன் (றஞ்சன்) உட்பட ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் நினைவு கூருகின்றோம்.

சகோதரர்கள்: சுதன், நரேன், மிதிலா
மைத்துனன்: DR. விவேகானந்தன்
மைத்துனி: சிவகௌரி
மக்கள்: ஜானகி துளசி,

### வடமராட்சி

...டித்துறை பகுதியில் மூன்று ஆட்லறி ஷெல்கள் விழுந்து வெடித்தன.

மேலும் திக்கம் கடற்பகுதியில் ஒருஎறிகணைவிழுந்து வெடித்தது. அப்பகுதியில் நின்ற மீனவர்கள் மயிரிழையில் தப்பிக் கொண்டனர். மற்றுமொருஎறிகணை கரணவாய் பகுதி நோக்கிச் சென்றது.

இதனையடுத்து நேற்று பகல் 11.20 மணியளவில் தொண்டமனாறு பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி ஒன்று அப்பகுதியை பலதடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது. (யோ)

### கிழக்கில்

...எனக் கூறிக்கொண்டு சிறிலங்கா அரசபடையினரும் அச்சுறுத்தல் பாணியிலான தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். வாக்களிக்காது இருக்க எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வாக்களிப்பில் அலட்சியப்போக்கு அவதானிக்கப்படின் அந்தந்தப்பகுதி

# தமிழ்நாடு அகதிமுகாமில் இரு குழுக்கள் கைகலப்பு

(கொழும்பு)

செங்கல்பட்டு எம். ஜி. ஆர்மாவட்டத்திலுள்ள பூசல் அகதிமுகாமில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் இரு கோஷ்டிகளுக்கிடையில் கடந்த திங்களன்று ஏற்பட்ட வாய்ச்சண்டை கைகலப்பில் முடிந்தது.

இக்கைகலப்பில் நான்கு இலங்கைத் தமிழ் அகதிகள் காயமடைந்தனர்.

இலங்கை திரும்பவேண்டும் என்ற குழுவினருக்கும் இலங்கைக்குத் திரும்பக் கூடாதென்ற குழுவினருக்கிடையிலும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்ததென்று பொலிசார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் ஸ்டான்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மோதல் குறித்து பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். இலங்கைதிரும்ப விரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இவர்கள் பற்றிய விபரங்களை பொலிஸ் அதிகாரிகள் அகதிகள் புனர்வாழ்வு இலாகாவுடன் தொடர்புகொண்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### இடம்பெயர்ந்த மாணவருக்கு அதிபர் கோரிக்கை

காங்கேசன்துறை மகாவித்தியாலயத்தில் கல்வியின்று தற்போது வேறு பாடசாலைகளில் பயிலும்மாணவர்களின் நன்மை கருதி அம்மாணவர்களும் அம் மாணவரின் பெற்றோரும் தம்மை உடனடியாக சந்திக்கும்படி இணுவில் இந்துக்கல்லூரியில் இயங்கும் காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபர் இ. அப்பாத்துரை கோரிக்கை விடுத்துள்ளார்.

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13.02.1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 781

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3435, 26-9626, 26-5491, 26-0736, 26-8497
42-1059, 26-7286, 26-3990, 26-4376, 28-9186
28-2511, 41-5015, 24-6448, 24-4282, 24-3594
28-3233, 27-7627, 41-9746, 27-6024, 27-5449
27-9236, 41-1227, 27-5406.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:


28-7261, 28-3890, 26-1745, 28-0523, 24-5140
26-2125, 28-6263, 41-5417, 28-3528, 28-1754
26-1690, 24-4707, 26-3962, 26-3146, 40-2249
26-6461, 40-7299, 26.0525, 24-4153, 22-6073
26-3998, 24-9489, 24-6439.

## மரண அறிவித்தல்

### சந்தியா இன்னாசிப்பிள்ளை

சந்தியா இன்னாசிப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் யாழ், பிரதான வீதி, ஸ்டார் சலூன் உரிமையாளரும் காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக் கணவரும், இராசமணியின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற திரேசம்மா, தேவதாஸ், செல்வம் ஜோர்ஜ், நோபேட், ராணி, மலர் ...

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## செ. குலேந்திரன்

(தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம், கைதடி)

தோற்றம் 22-12-1952    மறைவு 15-01-1994

நீரின்றி நாம் இங்கே நீரொறு வடிக்கின்றோம்
நீர் சென்ற உலகினிலே
நித்திய சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் (14-02-94) இன்று நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் அனைவரையும் இக் கிரியைகளில் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.

(7521)

---

மைத்துனி: சிவகௌரி
மக்கள்: ஜானகி துளசி,
ஈசா சிவானி.
மற்றும் உறவினர்கள்.


27, சேர் பொன் இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.    (சி-8622)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்:
15 - 6 - 1917

ஆண்டவன் அடியில்:
16 - 1 - 1994



## நீலயினார் முத்தையா

(12ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் எமக்கு ஆறுதல் கூறியும் பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (14-2-1994) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்.
தபால்பெட்டி ஒழுங்கை, தாளையடி லேன், திருநெல்வேலி.
மனைவி மக்கள், மருமக்கள், பெறாமக்கள் பேரப்பிள்ளைகள்.

(7519)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மக்கேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

பில் அலட்சியப்போக்கு அவதானிக்கப்படின் அந்தந்தப்பகுதிகள் மீது நாளடைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச படையினர் மக்களை அச்சுறுத்தியுள்ளனர்.

சுதந்திரமான தேர்தல் ஒன்றைதான் கிழக்குமாகாணத்தில் நடத்துவதாக பொய்ப் பிரசாரங்களைமேற்கொண்டு வரும் சிறிலங்கா அரசு அங்கு இராணுவத்தை பயன்படுத்தி மக்களை துன்புறுத்துவதன் மூலம் உள்ளூராட்சி தேர்தலை நடாத்த முனைவதாக கொழும்பு பத்திரிகைகள் சில தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

### கத்தோலிக்க

வாரம் அதிகாரிகள் இருவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரிடம் கையளித்தனர் என்றும் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தான் அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் வேளையில் இலங்கைக்கும் தாம் விஜயம் மேற்கொள்ள விரும்புவதாக இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனது விருப்பத்தைத் தெரிவித்ததை யடுத்து விஜேதுங்கா இவ் அழைப்பை விடுத்துள்ளார்.

---

### பிரேமா

உதவுவார்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு இரு விசேட பொலிஸ் கோஷ்டிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். விக்கிரமதுங்க பம்பலப்பிட்டி வஜிரா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் கத்திக் குத்துக் காயங்களுடன் இறந்து கிடக்கக் கடந்த செவ்வாயன்று கண்டுபிடிக்கப்பட்டார்.

---

### ஆங்கில

எனவே தாய் மொழியோடு ஆங்கிலமும் கற்க வேண்டிய அவசியம் இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

---

...தெரேசம்மா, தேவதாஸ், செல்வம் ஜோர்ஜ், நோபேட், ராணி, மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்கள் ஞானமுத்து, தங்கப்பொன், றோசி, மாகிறேற், ஐயாத்துரை, திருதம்பு, மேரி ஆகியோரின் சகோதரனும், காலம்சென்ற யோசேப், திரு. பங்கிராஸ், நோபேட் இராஜேஸ்வரி, நிர்மலா, மலர், காலஞ்சென்ற லதா ஆகியோரின் மாமனாரும், பாலா, ஞானா, புவனா ராசேந்திரன், சித்தா, ரமேஸ், ரகுவதனி, ரஜனி, ராகுலன், பாஸ்கரன், மனோ, சுதா, சாள்ஸ், டானியல், சுனிஸ்டா, ஜெனி, டெனிஸ், டயானா, டெனிலா, ஜான்ஸன், ஜனுஸி, குமார், போல், தனுஸா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 14. 2. 94 திங்கள் (இன்று) காலை 10. 00 மணியளவில் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்து செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

99/15 ஸ்ரேசன் லேன்
யாழ்ப்பாணம்

தகவல்
பிள்ளைகள்

(7522)

---

## இளையதம்பி கனகலிங்கம்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த இளையதம்பி கனகலிங்கம் 13-02-94 (நேற்று) சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி தங்கம்மாவின் அன்பு மகனும், தனலட்சுமியின் அன்புக்கணவரும், முரளிதரன் (ஜேர்மனி), சுபாங்கி (சுவிஸ்), சுபாஹினி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (ஜேர்மனி), சுகந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி, AIL விஞ்ஞானம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமரகுருபரன் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), சிவஜோதி ஆகியோரின் மாமனாரும், வினோஜன் (சுவிஸ்), துவாரகா (பிரான்ஸ்), துவாரகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், அருளானந்தம், பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-02-94-ல் நீர்வேலி மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

(7524)